கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடம்

முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை - பருவம் I – 2017/2018

**SOC 1101 - சமூகவியலின் அடிப்படைகள்**

இரண்டு (02) மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு(04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

**1.**

i. புலனறிவாதம் (Positivism) என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. விஞ்ஞான ரீதியாகச் சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கும் கற்பதற்குமான தேவையினை உருவாக்கிய வரலாற்றுக் காரணிகள் எவை? (3 புள்ளிகள்)

iii. சமூகம் பற்றிய விஞ்ஞான ரீதியான கற்கைக்குப் பொருத்தமான அகவயத்தன்மை (Subjectivity) மற்றும் புறவயத்தன்மை (Objectivity) என்னும் எண்ணக்கருக்களின் பொருத்தப்பாட்டினைக் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்

**2.**

i. வகுப்பு முரண்பாடு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. கார்ள் மாக்ஸ்ஸினைப் பொறுத்தவரையில் அடிக்கட்டுமானம் (Infrastructure) மற்றும் மேற்கட்டுமானம் (Superstructure) எனும் எண்ணக்கருக்களால் கருதப்படுபவை என்ன? (3புள்ளிகள்)

iii. கற்பனைவாத வகுப்பற்ற சமூகத்தில் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவோர் மற்றும் அடக்கு முறைக்கு உட்படுத்துவோர் இடையேயான சமூக உறவுநிலையினை மாக்ஸ் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றார்? (10 புள்ளிகள்)

**3.**

i. சமூகவியல் அறிவு என்பது விஞ்ஞான ரீதியானது எனும் கருத்தினை விளக்குக. (2 புள்ளிகள்)

ii. விஞ்ஞான முறைமையின் படிநிலைகளைச் சுருக்கமாகக் கருத்துரைக்குக. (3 புள்ளிகள்)

iii. கொழும்பில் பாலியல் தொழிலாளர்கள் (Sex workers) பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதாக நீங்கள் கருத்திற்கொள்க. நீங்கள் ஓர் அளவுசார்ந்த ஆய்வு, ஒரு பண்புசார்ந்த ஆய்வு அல்லது இரண்டும் சேர்ந்த ஆய்வினை தெரிவு செய்வீர்களா? உங்கள் தெரிவிற்கான காரணங்களைத் தருக. (10 புள்ளிகள்)

**4.**

i. சமூகக் குழு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. சமூகவியலாளர்களுக்கு சமூகக்குழுக்கள் பற்றிய கற்கை ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது? (3 புள்ளிகள்)

iii. தனிநபர் ஒருவரின் சமூகமயமாக்கலில் அவன்/அவள் சார்ந்த முதனிலைக் குழுக்களா அல்லது இரண்டாம் நிலைக் குழுக்களா முக்கியத்துவம் பெறுகின்றன? உமது விடையினை உதாரணங்களுடன் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

**5.**

i. முறைசார் சமூக ஒழுங்கமைப்பு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. நவீன மனிதனின் திறன்களைத் தர்க்கரீதியாக விபரிப்பதற்குப் பணிக்குழு ஆட்சி மிகச்சிறந்த உதாரணமாக மக்ஸ்பெவரால் அடையாளப்படுத்தப்பட்டது. இக் கருத்தினை விளக்குக. (3 புள்ளிகள்)

iii. முறைசார் நிறுவனமான பல்கலைக்கழகத்தின் உள்ளே இருக்கும் முறைசாரா நிறுவனங்கள் உங்களது வகிபங்கினை பல்கலைக்கழகத்தில் எவ்வாறு வெற்றிகரமாகச் செயற்படுத்துகின்றது? உதாரணங்களுடன் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

**6.**

i. மதம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. சமூகக் கூட்டொருமைப்பாட்டினை (social solidarity) உருவாக்குவதில் மதத்தின் வகிபங்கினை எமில் துர்க்கெய்ம் எவ்வாறு விளக்கியுள்ளார்? (3 புள்ளிகள்)

iii. மக்கள் மிகவும் தர்க்கரீதியாகவும் சமூகரீதியாகவும் மாற்றத்திற்கு உள்ளாகிய காரணத்தினால் மக்களுக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பு மாற்றமடைந்தது என்பதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களோடு உமது விடையினை விமர்சன ரீதியாகக் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

7.

i. சமூக அடுக்கமைவு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. அடுக்கமைவு உப-பண்பாடு (Strata Sub-culture) என்னும் எண்ணக்கருவினை உதாரணங்களுடன் விளக்குக. (3 புள்ளிகள்)

iii. வேறுபட்ட சமூக அடுக்கமைவு வடிவங்களில் உமக்கு உரித்தானது எது? இந்த முறைமையின் படி பல்கலைக்கழக பட்டமானது உமது சமூக நகர்வினை (Social mobility) எவ்வாறு மாற்றியமைக்கின்றது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்). பின்வரும்

8.

சமூகவியல் எண்ணக்கருக்களினை உதாரணங்களுடன் விளக்குக.

i. தர்க்க ரீதியான செயலுடன் தொடர்புபட்ட இலக்கு மற்றும் தர்க்க ரீதியான செயலின் பெறுமதியினை விளக்குக. (3 புள்ளிகள்)

ii. தர்க்க ரீதியான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகக் குறுக்கீடுகள் (3 புள்ளிகள்

iii. சுவீகரிக்கப்பட்ட மற்றும் அடைந்து கொள்ளப்பட்ட சமூக அந்தஸ்து (3 புள்ளிகள்)

iv. சமூகக்கட்டமைப்பு மற்றும் சமூக உறவுகள் (3 புள்ளிகள்)

v. நேரிடையான மற்றும் எதிரிடையான சமூகமயமாக்கம் (3 புள்ளிகள்)

******************************